www.kalviexpress.in
www.surabooks.com

12ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு மார்ச் - 2023
## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக [14 × 1 = 14]

1. தண்டியலங்காரம், ...................... என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது.
அ) சூரிய நிழல் ஆ) வீரசோழியம்
இ) காவியதர்சம் ஈ) முத்துவீரியம்

2. சுரதா நடத்திய கவிதை இதழ் :
அ) ஊர்வலம் ஆ) இலக்கியம்
இ) விண்மீன் ஈ) காவியம்

3. இந்தியாவின் முதல் பொது நூலகம் :
அ) கீழ்திசைச் சுவடிகள் நூலகம்
ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகம்
இ) மறைமலையடிகள் நூலகம்
ஈ) கன்னிமரா நூலகம்

4. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?
அ) மெய்ப்படிமம் ஆ) வினைப்படிமம்
இ) உருப்படிமம் ஈ) பயன்படிமம்

5. சாப்ளினின் சாதனைப் படமான 'தி கிரேட் டிக்டேட்டர்' வெளியான ஆண்டு :
அ) 1930 ஆ) 1950
இ) 1960 ஈ) 1940

6. 'வெங்கதிர்' என்பதன் இலக்கணக் குறிப்பு :
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

7. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது :
அ) தாய்வழிச் சமூகமுறை
ஆ) தனிக்குடும்பமுறை
இ) தந்தைவழிச் சமூகமுறை
ஈ) விரிந்த குடும்பமுறை

8. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு :
அ) 1816 ஆ) 1812
இ) 1815 ஈ) 1824

9. மகரயாழ் எத்தனை நரம்புகளைக் கொண்டது?
அ) 16 ஆ) 21
இ) 7 ஈ) 17

10. எளியது, அரியது என்பன :
அ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு
ஆ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை
இ) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது
ஈ) சொல்வது - சொல்லியபடி செய்வது

11. 'பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப' என்பது ........... பாவிகம்.
அ) மணிமேகலையின்
ஆ) கம்பராமாயணத்தின்
இ) வளையாபதியின்
ஈ) சிலப்பதிகாரத்தின்

12. வெண்பாவின் ஓசை:
அ) துள்ளல் ஆ) அகவல்
இ) தூங்கல் ஈ) செப்பல்

13. தமிழில் உயிர்மெய்யெழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள் :
அ) 136 ஆ) 120
இ) 126 ஈ) 116

14. 'தம்மனை' என்பது ........... இல்லம்.
அ) தந்தையின் ஆ) மனைவியின்
இ) உடன்பிறந்தானின் ஈ) கணவனின்

### பகுதி - II – பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. [3 × 2 = 6]

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
16. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
17. தொன்மம் - விளக்கம் தருக.
18. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யாருக்கு?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. [2 × 2 = 4]

19. இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?
20. எழுத்தாணியின் வகைகள் யாவை?
21. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. [7 × 2 = 14]

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
தலை, தளை, தழை
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) ஈந்த ஆ) பேசுவார்
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) தனியாழி ஆ) அருங்கானம்
25. கலைச் சொல்லாக்கம் தருக.
அ) Passport ஆ) Folder




enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.kalviexpress.in

www.kalviexpress.in
www.surabooks.com



**26.** படத்திற்குப் பொருத்தமான பின்வரும் திருக்குறளின் விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.



உருவுகண்டு ............. வேண்டும் உருள்பெருந்தேர்க்கு ................. அன்னார் உடைத்து

**27.** வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

**28.** பேச்சு வழக்கை எழுத்து வழக்கமாக மாற்றுக.
ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

**29.** சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) வெங்காயம்
ஆ) தலைமை

**30.** தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
ஆட்டுத்தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

## பகுதி - III – பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. [2 × 4 = 8]

**31.** ‘பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்’ என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?

**32.** இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

**33.** வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

**34.** அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு** மட்டும் விடை தருக. [2 × 4 = 8]

**35.** சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

**36.** நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

**37.** மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

**38.** தாய் வழிக் குடும்பம் குறித்து பக்தவத்சல பாரதி கூறும் கருத்துகளை விவரிக்கவும்.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. [3 × 4 = 12]

**39.** அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**

ஆ) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைத் தற்று. - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**40.** இலக்கிய நயம் பாரட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்குக.)

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா! - பாரதியார்

**41.** பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) குன்றின் மேலிட்ட விளக்கு போல

**அல்லது**

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

**42.** அ) வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

**அல்லது**

ஆ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**43.** தமிழாக்கம் தருக.
I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc., other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc., are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

## பகுதி - IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். [3 × 6 = 18]

**44.** அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**அல்லது**

ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

**45.** அ) ‘நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து’ என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

ஆ) மயிலையார் ஓர் ‘ஆராய்ச்சிப் பேரறிஞர்’ என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

**46.** அ) ‘கோடை மழை’ கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

**அல்லது**

ஆ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்கவும்.

## பகுதி - V

**47.** **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** [4 + 2 = 6]
அ) “தெய்வமணிமாலை” என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள ‘ஒருமையுடன் எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) “சினம்” என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.kalviexpress.in

www.kalviexpress.in
www.surabooks.com



## விடைகள்

### பகுதி - I

1. இ) காவியதர்சம்
2. ஈ) காவியம்
3. ஈ) கன்னிமரா நூலகம்
4. அ) மெய்ப்படிமம்
5. ஈ) 1940
6. அ) பண்புத்தொகை
7. இ) தந்தைவழிச் சமூகமுறை
8. ஆ) 1812
9. ஈ) 17
10. ஈ) சொல்வது - சொல்லியபடி செய்வது
11. ஆ) கம்பராமாயணத்தின்
12. ஈ) செப்பல்
13. இ) 126
14. ஆ) மனைவியின்

### பகுதி - II - பிரிவு - 1

15. மழைக்காலத்தில் வெட்ட வெளியில் பரவியுள்ள தூசுகள் மறைந்து விடுகின்றன. மழை பெய்து நின்றவுடன் வரும் சூரிய ஒளியானது வெண்மையாகத் தோன்றுகிறது. அதனால் நகரம் பட்டை தீட்டிய வெள்ளை நகரமாகத் தெரிகிறது.
16. ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லது.
17. கடவுளர்கள், தேவர்கள், மக்கள், விலங்குகள் ஆகிய பல்வகை உயிரினங்களையும் ஒருங்கிணைத்து படித்தால் நம்ப முடியாதது போல் தோன்றுகின்ற செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் கொண்டு இயங்குகின்ற பழமையான கதைகளையே ‘தொன்மம்’ என்பர். பழங்கதை. புராணம். கருத்துவடிவம் என்ற பொருள்களும் உண்டு.
18. கலைத் தொழிலில் வல்லவர்களாக இருப்பவர்களுக்கு இவ்வுலகில் எந்தத் திசையில் சென்றாலும் அங்கு உணவு, தவறாமல் கிடைக்கும்.

### பிரிவு - 2

19. உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி.
20. மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகளாகும்.
21. (i) பின்னணி இசை, திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக்கொண்டு வந்து காட்சி அமைப்பிற்கு உயிரூட்டுகிறது.
    (ii) **சான்று :** ஒரு பெண் சன்னல் வழியாக தெருவைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்போது ஒரு மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுகிறது. தெருவோ மகிழுந்தோ காட்டப்படவில்லை. ஒலியின் குறிப்பிலிருந்து அவளைப் பார்க்க வந்தவர் புறப்பட்டுவிட்டதை அறிய முடிகிறது.

### பிரிவு - 3

22. ஆடு மாடுகள் **தளை**யில்(வயல்) இருந்த இலை**தழை**களை மேய்ந்ததைக் கண்ட சிறுவன் சிறுகல்லை எடுத்து ஆட்டின் **தலை**யில் படுமாறு வீசினான்.
23. அ) ஈந்த - ஈ + த்(ந்) + த் + அ
    ஈ - பகுதி
    த் - சந்தி ‘ந்’ ஆனது விகாரம்
    த் - இறந்தகால இடைநிலை
    அ - பெயரெச்ச விகுதி

    ஆ) பேசுவார் - பேசு + வ் + ஆர்
    பேசு - பகுதி
    வ் - எதிர்கால இடைநிலை
    ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி
24. அ) தனியாழி - தனி + ஆழி
    **விதி 1 –** இ ஈ ஐ வழி யவ்வும்
    - தனி + ஆழி - தனி + ய் + ஆழி
    **விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
    தனியாழி என்றானது.

    ஆ) அருங்கானம் - அருமை + கானம்
    **விதி 1** - ஈறு போதல் - அரு~~மை~~ + கானம்
    **விதி 2** - இனமிகல் - ‘ங்’ தோன்றி அரு+ ங் + கானம்
    அருங்கானம்
25. அ) Passport - கடவுச்சீட்டு ஆ) Folder - மடிப்புத்தாள்
26. எள்ளாமை, அச்சாணி.
27. ஆசிரியருக்கு<u>த்</u> கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை<u>த்</u> தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றி<u>ப்</u> பல நல்லனவற்றை<u>க்</u> கற்று<u>க்</u> கொடுக்கும்.
28. இரவுக்கு சிற்றப்பாவைக் காவலுக்குப் போகச் சொல்.
29. அ) வெங்காயம் - சிறிய வெங்காயம் உடலுக்கு நல்லது.
    வெங் + காயம் - போரினால் ஏற்பட்டது.(வெங் + காயம் - பெரும்காயம்)
    ஆ) தலைமை - தலைமைப் பொறுப்பில் உள்ளவர் நேர்மையாக இருக்க வேண்டும்.
    தலை + மை - தலையில் மை பூசியதால் முடி கருப்பாக இருக்கிறது.
30. அ) ஆட்டுப் **பட்டி**யைச் சுற்றிலும் எலிகள் **வளைகள்** அமைத்திருந்தன.

### பகுதி - III - பிரிவு - 1

31. (i) ‘பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்’ என சிற்பி முத்தமினா பற்றி கூறுகிறார்.
    (ii) முத்தமிழே! எங்கள் உள்ளத்தில் பொங்கிப் பெருகும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக இருக்கின்றாய்.
    (iii) பாண்டிய மன்னர்கள் அமைத்திருந்த தமிழ்ச்சங்கத்தின் அரியணையில் வீற்றிருந்தாய்.
    (iv) பாரி முதலான வள்ளல்கள் பலரைப் பெற்றுத் தந்துள்ளாய்!
    (v) ஈகைக் குணம் நிறைந்திருந்த மாந்தர்கள் வாடிநந்திருந்த அந்தப் பொற்காலம் மீண்டும் அமைவதற்கு எங்கள் உடல் சிலிர்க்கும்படியாக தமிழாகிய குயிலே இன்னிசை பாடி வருவாயாக! என்று அழைக்கிறார்.
32. (i) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் தனக்கு ஒரு நெறிப்பட்ட மனத்துடன் கந்தவேளின் மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும் என்றும்,
    (ii) உள்ளத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர் தம் உறவு தன்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும் என்றும் வேண்டுகிறார்.
33. (i) தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய கோவலர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.
    (ii) கோவலர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மலர்களில் இருந்து வடிந்த நீர்த்துளிகள் அவர்களுக்கு மேலும் குளிரை உண்டாக்கியது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.kalviexpress.in

www.kalviexpress.in
www.surabooks.com



(iii) குளிரினால் நடுங்கிய அவர்கள் பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றி கன்னங்களில் அந்த வெப்பத்தை வைத்துக் கொண்டனர்.

34\. (i) போருக்குப்பின், ஆட்களற்ற பொழுதில் மரங்களற்ற பொட்டல் வெளியில் உலவிய யானைகளின் எச்சத்திலிருந்த விதையின் மூலமாக அந்தச் செடி பூத்திருக்கலாம்.

(ii) யாரோ ஒருவரின் காலணியின் பின்புறம் ஒட்டிக் கிடந்த விதை மண்ணில் விழுந்து அந்தச் செடியாக முளைத்திருக்கலாம், என்கிறார் தமிழ்நதி.

**பிரிவு - 2**

35\. எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் ஓசையோடும் இசைக் கருவியோடும் தான் பிறக்கிறது. ஓசையும், பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதனையே ஒலிப்பின்னல் என்கிறோம்.

(i) *"கடந்தடு தானை மூவிருங்கூடி*
*உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே"*
எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்
இப்பாடலில் மெல்லின, இடையின மெய்களை விட **வல்லின மெய்கள்** அதிகமாக அமைந்துள்ளன.

(ii) *"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்*
*கடாஅ யானைக் கலிமான் பேக"*
என்ற புறநானூற்றுப் பாடல்
**உயிர் நெடில் ஒலிகள்** அதிகமாக அமைந்துள்ளன.

(iii) *"புணரின் புணராது பொருளே; பொருள்வயின்*
*பிரியின் புணராது புணர்வே"*
என்ற நற்றிணைப் பாடல்
**ஒரே சொல் மீண்டும் மீண்டும்** அமைந்துள்ளது.

(iv) "நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை"
என்ற புறநானூற்றுப் பாடல்
**ஒரே சொல் மீண்டும் மீண்டும்** அமைந்திருப்பதுடன் **சொல் விளையாட்டும்** சேர்ந்து அமைந்துள்ளது.

36\. (i) நான் ஆசிரியரானால் மாணாக்கர்களிடம் அன்பும், பாசமும் காட்டி அவர்களை நெறிப்படுத்துவேன். கொடிய தண்டனைகள் அளிக்க மாட்டேன்.

(ii) அவர்கள் மனம் புண்படும்படியான கடுமையான வார்த்தைகளை வகுப்பறையில் பயன்படுத்தமாட்டேன்.

(iii) அவர்களுடன் நட்புடனும், அன்புடனும் பழகி நல்ல வகுப்பறை சூழலை உருவாக்கி, என் மீது உள்ள பயத்தைப் போக்கி செயல்முறை கற்பித்தலை உருவாக்குவேன்.

(iv) கற்றலில் பின்தங்கியோரை கற்போரை அன்பினால் நெறிப்படுத்துவேன்.

37\. **மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் :**

(i) மயிலை சீனி. வேங்கடசாமி 16-12-1900 ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். இவரின் தந்தை சீனிவாசன் ஒரு சித்த மருத்துவர். இவரின் தமையனார் கோவிந்தராசன் ஒரு தமிழாசிரியர்.

(ii) தந்தையின் சித்த மருத்துவப் பின்புலம், தமையனாரின் தமிழ்ப் பின்புலம் ஆகியவையே இவரை வரலாற்றாய்வாளராக உருவாக்கியது. இவர் தொடக்கப் பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

(iii) விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க, தெ.பொ.மீ, ச.த.சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக இவரது ஆய்வுக் கட்டுரைகள் குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி முதலான இதழ்களில் வெளியாகின.

(iv) சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு முதலான பல துறைகளிலும் இவர் கவனம் செலுத்தினார்.

(v) தமிழ்ப் பண்பாட்டிலும் தமிழர் வரலாற்றிலும் ஆழ்ந்த அக்கறை கொண்ட மயிலை சீனி. அவர்கள் தமிழ் பண்பாட்டின் தனித்தன்மையை நிறுவுவதில் உறுதியான பார்வை கொண்டவர்.

(vi) தம் வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர். நாம் தாழாமல் இருக்கத் தம்மைத் தாழ்த்திக் கொண்டவர். நமது பெருமைகளை ஆய்வு நோக்கில் விரித்துரைத்தவர். நமது சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர்.

38\. **தாய்வழிக் குடும்பம் :** சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள். தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(i) சிறுவர்தாயே பேரிற் பெண்டே (புறம் -270)
(ii) செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன்(புறம் -276)
(iii) வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் (புறம் -277)
(iv) முளரி மருங்கின் முதியோள் சிறுவன் (புறம் -278)
(v) என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும் (கலி - பாலை 8) - முதலான தொடர்களில் இவளது மகன் என்றே கூறப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய முறை இருந்துள்ளது. தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக கருதப்பட்டனர். தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என குறுந்தொகையில் உள்ள மருதத்திணைப் பாடல் ஒன்று கூறுகிறது.

**பிரிவு - 3**

39\.

**அ)** **அணி விளக்கம் :** செய்யுளில் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு, அதற்குத் தொடர்புடைய மற்ற பொருள்களை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**சான்று :**
சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**அணிப்பொருத்தம் :** ஏமப்புணை என்பதற்கு பாதுகாப்பான தெப்பம் என்பது பொருளாகும். 'இனம் என்னும் ஏமப்புணை' என்று உருவகப்படுத்திவிட்டு அதற்குத் தொடர்புடைய பாதுகாப்பான உறவினர்கள் அல்லது சுற்றத்தார் என்று கூறாமல் விட்டுவிட்டதால் இது **ஏகதேச உருவக அணி**யாகும்.

**அல்லது**

**ஆ)** உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைத் தற்று.
இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி **'உவமையணி'** ஆகும்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
www.kalviexpress.in

www.kalviexpress.in
www.surabooks.com



**அணி விளக்கம்:** ஒரு பொருளின் தொழிலுக்கு மற்றொரு பொருளின் தொழிலைக் காரணம் காட்டி உவமை கூறுதல் தொழில் உவமையணி எனப்படும்.

**பொருள் :** மனப்பொருத்தம் இல்லாத உட்பகை கொண்டவர்களுடன் வாழ்வது, ஒரு குடிசையின் உள்ளே கொடிய நாகத்தோடு வசிப்பது போல் எந்த நிமிடத்திலும் அபாயத்தை உண்டாக்கக் கூடியது.

**அணிப்பொருத்தம்:**

**உவமை –** அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை

**உவமேயம் –** ஒரு குடிசையில் பாம்புடன் வாழும் வாழ்க்கை

**உவம உருபு –** அற்று.

40. **திரண்ட கருத்து :** "வானில் மின்னல் வெட்டுகிறது. கடலின் வீரம் மிக்க அலைகள் விண்ணைத் தொடுமளவிற்கு உயர்கின்றன. பேரிகை முழங்குவது போல பலத்த ஓசையுடன் மேகங்கள் முழங்குகின்றன. காற்றின் 'கூகூ' என்ற பேரோசையானது வானத்தைக் குடைவது போன்று ஒலிக்கின்றது. வானத்தில் பலவிதமான ஒலிகள் தோன்றுவது பலவிதமான தாளங்கள் ஒன்று சேர்ந்து இசைப்பது போல் உள்ளது. எட்டுத்திசைகளிலும் இடியுடன் கூடிய இப்பெரு மழை எப்படி வந்தது தம்பி வீரா!" என்று பாரதியார் கேட்கிறார்.

**மையக் கருத்து :** மழை வரும்போது வானில் நிகழும் அழகான நிகழ்வுகளைக் கண்முன் காட்டுவது போல பாடல் அமைந்துள்ளது.

**மோனைத் தொடை :** வெட்டி - வீர ; கொட்டி - கூவென்று; எட்டுத்திசை - எங்ஙனம்

**எதுகைத் தொடை :** வெட்டி - கொட்டி சட்டச் - எட்டுத்திசை

**சொல்நயம் :** கூ கூ வென்று, சட்டச்சட, இடிக்குது குடையுது, கனைக்குது போன்ற ஓசையை உணர்த்தும் சொற்களைக் கையாண்டுள்ளமை பாடலுக்கு அழகூட்டுகிறது.

**அணிநயம் :** உயர்வு நவிற்சி அணி அமைந்துள்ளது. எ.கா கடல் வீரத் திரை கொண்டு விண்ணையிடிக்குது.

41.

**அ) குன்றின் மேலிட்ட விளக்கு போல**

**பழமொழி விளக்கம் :** மலையின் மேல் ஏற்றி வைத்த விளக்கைப் போல அனைவரும் அறியும் வண்ணம் பிரகாசிப்பது போன்றதாகும்.

**வாழ்க்கை நிகழ்வு :** விஞ்ஞானி அப்துல்கலாம் 21ஆம் நூற்றாண்டின் இணையற்ற அறிவியல் அறிஞர். இராமநாதபுர மாவட்டத்தில் 1931ஆம் ஆண்டு பிறந்தார். நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது, அங்கு இளம் பிள்ளை வாதத்தினால் துன்பப்படுபவர்களை கண்டு மனம் இரங்கினார். அவர்களுக்காக கார்பன் பொருளைப் பயன்படுத்தி லேசான செயற்கை கால்களை உருவாக்கி அளித்தார். பிரித்வி, ஆகாஷ், நாக் போன்ற ஏவுகணைகளை விண்ணில் செலுத்தினார். இந்தியா தலைநிமிர்ந்து நிற்க காரணமான அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்தினார்.

'கனவு... கனவு... கனவு இதனை சிந்தனை வடிவமாக்குங்கள், பின் செயலாற்ற முனைப்படுங்கள்...' என்று இளைஞர்களுக்கு அறிவுரை கூறுவார். 'இந்தியாவின் ஏவுகணை நாயகன்' என்று அப்துல்கலாம் போற்றப்படுகிறார். இவரது புகழ் குன்றின் மேலிட்ட விளக்கு போல எங்கும் ஒளி வீசுகிறது.

**நீதி :** இளைஞர்கள் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து செய்தால் வாழ்வில் குன்றில் மேலிட்ட விளக்குப் போன்று உலகத்தின் பார்வைக்கு ஒளி மிக்கவர்களாக திகழலாம்.

**அல்லது**

**ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்**

**பழமொழி விளக்கம் :** முயற்சி உடையவர்கள் முயற்சியைக் கைவிடாது தம் நோக்கத்தில் உறுதியாய் இருந்தால் வெற்றி இலக்கை நிச்சயம் அடைவார்கள் என்ற பொருளை உணர்த்துகிறது இந்தப் பழமொழி. தொடர்ந்து முயற்சித்தால் மிகக் கடினமான செயலாக இருந்தாலும் எளிமையாக கூடி வரும் என்பதையே இந்தப் பழமொழி உணர்த்துகிறது.

**வாழ்க்கை நிகழ்வு :** சங்கீதா ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவி. ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவள். அவளுக்குச் சரியாகப் படிக்க வராது. அவளை அவளுடைய வகுப்புத் தோழிகள் அனைவரும் ஏதாவது படிக்கச் சொல்லி அவள் படிப்பதைப் பார்த்துச் சிரிப்பார்கள். ஆனால் அதற்காக அவள் வருத்தப்படவில்லை. அவளை எல்லோரும் 'திக்குவாய்க்காரி' என்று கிண்டல் செய்தனர். வரும் பள்ளியின் ஆண்டு விழாவிற்கு சிறப்பான நாடகம் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு தலைமை ஆசிரியர் மாணவிகளிடம் கூறிச் சென்றார். நாடகத்திற்கு மாணவிகள் விருப்பத்துடன் தங்கள் பெயரை வகுப்பாசிரியரிடம் கொடுத்தனர். சங்கீதாவும் நாடகத்திற்குத் தன் பெயரைக் கொடுத்தாள். உடனே ஆசிரியர் "உன்னால் ஒரு வார்த்தையே சரியாகப் பேச வராது. நீ நாடகத்தில் வசனம் பேசப் போகிறாயா? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நீ போ" என்று கூறிவிட்டார். ஆனால் சங்கீதா விட்டுவிடவில்லை. மாலையே ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று "நான் நன்றாகப் பேசுவேன். என்னையும் நாடகத்தில் சேர்த்து நடிக்க வையுங்கள்" என்றாள். ஆசிரியர் அவளிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்து இதை "நீ திக்காமல் படித்துவிட்டால் உன்னை நாடகத்தில் சேர்த்து நடிக்க வைக்கிறேன். ஆனால் உன்னால் அது முடியுமா?" என்று கேட்டார். அன்றிலிருந்து தினமும் ஒரு மணி நேரம் ஆசிரியரிடம் அப்புத்தகத்திலுள்ள பகுதியைப் படித்து காண்பித்தாள். ஆசிரியரின் மனம் இளகியது. சங்கீதாவை நாடகத்தில் சேர்த்து அவளுக்கு ஏற்றாற்போல் நாடக வசனங்களை எழுதிக் கொடுத்து நடிக்க வைத்தார். பள்ளியின் ஆண்டு விழா நாளன்று நாடகத்தில் சங்கீதா பேசிய வசனங்களைக் கண்டு அனைவரும் கைதட்டி பாராட்டினர். நாடகம் சிறப்பாக இருந்ததற்கு சங்கீதாவின் பேச்சே காரணமாகும்.

**நீதி :** எந்தச் செயலும் முதலில் கடினமாகத் தெரிந்தாலும் அதைச் செய்யச் செய்ய எளிதாக மாறிவிடும் என்பதே இப்பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

42.

**அ) வெண்பாவிற்குரிய இலக்கணம்:**

(i) இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை பிறழாமல் பா அமைய வேண்டும்.

(ii) ஈற்றடி முச்சீராகவும் ஏனையவை நாற்சீராகவும் இருக்கும்.

(iii) ஈரசைச் சீர்களான மாச்சீரும் விளச்சீரும் மூவசைச் சீரில் காய்ச் சீரும் வரும்.

(iv) ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்ப்பாடுகள் ஒன்றைக் கொண்டு முடியும்.

**அல்லது**

www.kalviexpress.in
www.surabooks.com



ஆ) **திணை விளக்கம் :** பாடு ஆண் திணை பாடாண் திணை பாடப்படுகின்ற ஆண் மகனுடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**சான்று :** காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே; புறம் (பிசிராந்தையார்)

**திணைப் பொருத்தம் :** குறைந்த நிலமாயினும் அதில் விளைந்த நெல்லை உணவாக்கி கவளமாக கொடுத்தால் யானைக்குப் பல நாள்களுக்கு உணவாகும். ஆனால் நூறு வயலாக இருந்தாலும் யானை தனித்து சென்று உண்டால் அது உண்ணும் நெல்லைவிட காலில் அழிந்து போதும் நெல்லே அதிகமாக இருக்கும். அது போல அறிவுடையை வேந்தன் மக்களிடமிருந்து வரியைத் திரட்டும் போது முறை அறிந்து செயல்பட்டால் மன்னனும், மக்களும் நாடும் சிறக்கும். இப்பாடலில் மன்னன் முறை அறிந்து வரி பெற வேண்டும் சுட்டிக்காட்டியதால் இது பாடாண் திணைக்கும் பொருத்தமாயிற்று.

43. மூத்தோரை மதித்தல், சந்திக்கும் அனைவரையும் வாழ்த்துதல், அவர்கள் புறப்படுகையில் நலமாய் சென்று வர ஆசி வழங்கல் ஆகிய நல்ல பழக்கவழக்கங்கள் என்னிடம் இருப்பதை நான் உறுதி செய்து கொள்வேன். இவற்றைத் தவிர, சட்டத்தைப் பின்பற்றுதல், ஏழை எளியோர்க்கு உதவுதல், நோயால் பாதிக்கப்பட்டோர்க்கும் - தேவையுள்ளோருக்கும் உதவுதல், வீடு இல்லாதவர்க்குப் புகலிடம் அளித்தல், ஊனமுற்றோர்க்கு உதவுதல் ஆகியவையும் என் நல்ல வழக்கங்களாகும். என் அமைதியான வாழ்க்கைக்காக எழுதுதல், பாட்டு கேட்டல், நடனம் ஆடுதல், பாடுதல் போன்ற நல்ல வழக்கங்களையும் கொண்டுள்ளேன். இவை என் ஆன்மாவின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

## பகுதி - IV

44.

அ) **முன்னுரை:** தொல்லியல் சான்றுகளால் அறியப்பட்ட வரலாற்றுக் காலத்தின் தொடக்கமாக உள்ள சங்க இலக்கியம் தமிழ் மொழியின் நடை அழகியல் பரிமாணங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது.

**மொழிசார் கலை:** இலக்கியத்தையும் மொழியையும் ஒன்றாக சேர்த்துக் கூறுகின்ற தொல்காப்பியம் அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்றது. உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுகின்றன. இலக்கியம் என்ற மொழிசார் கலையானது மொழியின் தனித்துவமான பண்புகளைத் தனதாக்கிக் கொள்ளும் தன்மை கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் எனப்படுகிறது. இதனால் மொழிசார்ந்த பொருள், மொழிசார்ந்த கலையாக மாறுகிறது.

**நடையியல் :** ஒலிக்கோலங்கள், சொற்புலம், தொடரியல் போக்குகள், ஆகியவை நடையியல் கூறுகளாக அமைந்துள்ளன.

**ஒலிக்கோலங்கள் :** மொழி சார்ந்த கவிதைகள், ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொண்டு பிறக்கின்றன. இது ஒலிப்பின்னல் எனப்படுகிறது.

**(எ.கா)**

(i) மெல்லின, இடையின மெய்களைவிட வல்லின மெய்கள் அதிகமாக வருவது.
(ii) உயிர் நெடிலின் வருகை அதிகரிப்பது.
(iii) சில ஒலிகளும் சில சொற்களும் மீண்டும் மீண்டும் அமைவது.
(iv) இவற்றுடன் சொல் விளையாட்டுகளும் சேர்ந்து வருவது.

**சொற்புலம் :** உணர்வும் பொருளும்; கலையும் பண்பாடும்; வரலாறும் அரசியலும் சொற்புலத்தில் பொதிந்து கிடக்கின்றன.

**சொற்புலத்தில் வருவன :**

(i) ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.
(ii) பல பொருள்கள் குறித்த ஒரு சொல்
(iii) பலதுறைகள், பல சூழல்கள் மற்றும் பல புனைவுகளுக்கு உரியனவாய் வருதல்
(iv) உணர்வும் தெளிவும் கொண்டதாக வருதல்.

**தொடரியல் போக்குகள்:** கவிதையைக் கூறுவோருக்கும் கேட்போருக்கும் இடையில் ஏற்படும் உணர்வுகளுக்கு ஏற்ப தொடர்கள் இயங்குகின்றன. உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு ஆகியவற்றில் எழுவாய் செயப்படுபொருள் அல்லது பிற அமைப்பு பயனிலை என்று தொடரமைப்பு இருக்கும். ஆனால் சங்க இலக்கியங்களில் இவை பாடலின் இறுதியில் பிறழ்ந்து காணப்படுகின்றன. இந்தப் பிறழ்வுநிலை மறுதலைத் தொடர் எனப்படுகிறது.

**முடிவுரை:** நடையியல் என்பது, கவிதை வடிவமைப்பின் பகுதிகளையும் முழுமையினையும் சார்ந்து அமைகின்றது. இதற்கு முதன்மை ஆதாரமாக சங்க இலக்கியம் அமைந்துள்ளது.

**அல்லது**

ஆ) **வாழ்வு சிறக்க வழிகாட்டும் நூல் :** மனித குலம் எந்த இடத்தில் வாழ்ந்தாலும் எந்தச் சூழலில் வாழ்க்கை முறையை மேற்கொண்டிருந்தாலும் அங்கெல்லாம் ஒளியைப் பாய்ச்சி, வாழ்வு சிறந்து விளங்க வழிகாட்டும் நூல் திருக்குறள் ஆகும்.

**சிந்தனையைத் தூண்டும் அருள்வாக்கு :** சாதி சமயங்களால் வேறுபட்டவர்கள் அனைவரும் ஏற்கும் கருத்துப்பொதுமை இந்நூலில் உண்டு. கற்பவர் நெஞ்சில் ஆழப்பதியும் வண்ணம் எடுத்துரைக்கும் வெளிப்பாடு இந்நூலில் உண்டு. காலந்தோறும் புத்தம் புதிய சிந்தனையைத் தூண்டும் அருள்வாக்கு இந்நூலின் தனித்தன்மை ஆகும்.

**அறத்தில் உறுதி :** திருவள்ளுவர் "மறந்தும் பிறர்க்கும் கெடுதியானவற்றை எண்ணக்கூடாது, அவ்வாறு எண்ணினால் எண்ணியவனுக்குக் கெடுதி விளையும்" என அறத்தின் உறுதித் தன்மையை வலியுறுத்தியுள்ளார். பெற்ற தாயின் பசியையே காண நேர்ந்தாலும் சரி, அதைப் போக்குவதற்காகவும், சான்றோர் பழிக்கும் தீய செயல்களைச் செய்யக்கூடாது என வலியுறுத்துகின்றார் திருவள்ளுவர். நடுவுநிலைமை தவறிப் பெறக்கூடிய செல்வம் நன்மையே தருவதாக இருந்தாலும் அதை அப்போதே நீக்கிவிட வேண்டும் என வள்ளுவர் வாழ்வியல் நெறியை உணர்த்துகின்றார்.

உயிர்வாழ்வைப் பொருட்படுத்தாமல் உயர் நெறியை வற்புறுத்தும் திருவள்ளுவர், நெறியோடு வாழ்வதற்கு உரிய படிகளையும் தெளிவாக்குகின்றார். நெஞ்சத்தைப் பண்படுத்தும் அறநெறியை வற்புறுத்தும் திருவள்ளுவர் உலக வாழ்க்கையில் சிறந்து விளங்குவதற்குக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்ற நான்கு அதிகாரங்களில் அறிவு வளர்ச்சியின் சிறப்பை உணர்த்தி வாழ்வியலுக்கு மேன்மை ஊட்டும் கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளார்.

45.

அ) நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நாங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலின் தொகுப்பு.



www.kalviexpress.in

www.kalviexpress.in
www.surabooks.com



**நெகிழி அறிமுகம் :**

நெகிழி அல்லது பிளாஸ்டிக் (Plastic) என்பது ஒரு பொருள். ஏதாவது ஒரு நிலையில் இருந்து பின்னர் இறுகி திட நிலையை அடைவதைக் குறிக்கும் சொல் ஆகும். பிளாஸ்டிக்கோஸ் என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து பிளாஸ்டிக் என்ற சொல் உருவானது. அழுத்தம் தந்தால் வளைந்து கொடுக்காமலும் உடைந்து போகாமலும் இருக்கும் பொருள்கள் நெகிழி ஆகும்.

**சுற்றுச்சூழல் கேடு :**

கால்நடைகள், வனவிலங்குகள் போன்றவை உணவுடன் பிளாஸ்டிக் குப்பையை உட்கொள்வதால் உணவுக்குழாய் அடைபட்டு துன்புறவும், மரணமடையவும் செய்கின்றன. வீட்டிலிருந்து தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மண்ணின் தன்மையைப் பாதிக்கின்றன. நெகிழி குடி தண்ணீர் பாட்டில்கள், குளிர்பான பாட்டில்கள் போன்றவை சாக்கடைகளை அடைத்து கொண்டு பல இன்னல்களை ஏற்படுத்துகின்றன.

**பரவும் நோய்கள் :**

நம் அன்றாட வாழ்வில் தூக்கியெறியப்படும் பிரிக்காத குப்பைகளினால் கொசுக்களால் பரவும் நோய்கள் உருவாகின்றன. மேலும் கேன்சர் போன்ற வியாதியை உருவாக்கும் தன்மையை நெகிழி கொண்டுள்ளது.

**தீர்வுகள் :**

நெகிழிப் பைகளுக்கு மாற்றாக சணல் மற்றும் துணி போன்ற எளிதில் மட்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தலாம். தண்ணீர் குடுவைகளுக்கு மண்பாண்டங்கள், உலோகங்கள் ஆகியவைகளால் செய்யப்பட்ட குடுவைகளைப் பயன்படுத்தலாம். வியாபாரிகள் நெகிழிக்கு மாற்றாகப் மட்கும் பொருட்களை பயன்படுத்த முயற்சி செய்யலாம். உணவு விடுதிகளில் இயற்கையாக கிடைக்கும் பொருள்களால் ஆன கோப்பைகள் மற்றும் தட்டுக்களைப் பயன்படுத்த அறிவுறுத்தலாம். நெகிழியின் பயன்பாட்டைத் தவிர்ப்போம்! சுற்றுச்சூழலை காக்க பாடுபடுவோம்.

**அல்லது**

**ஆ) முன்னுரை :** மயிலையாரின் பல ஆய்வுகள் தமிழுக்கு முதன்முதலாக வழங்கப்பட்டவை. இவரது ஆய்வுகள் அறிஞருக்கு மட்டுமின்றிப் பொதுமக்களுக்கும் அறிவு விருந்தோம்பியவை. மயிலையாரின் ஆய்வு நூல்களில் வேண்டாத நூலிது என்றோ நூலில் வேண்டாத பகுதி என்றோ ஒதுக்க முடியாத வகையில் சிறந்த நூல்களை இயற்றியுள்ளார். மயிலையார் ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர் என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் இக்கட்டுரையில் காண்போம்.

**தொடக்ககால ஆய்வுகள் :** ச.த.சற்குணர் அவர்களின் உரையால் ஈர்க்கப்பட்ட மயிலையார் 'கிறித்துவமும் தமிழும்' என்னும் நூலை இயற்றினார். அதன்பின் தமிழின் தொல் இலக்கியம், தொல் கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' ஆகிய நூல்களை இயற்றினார்.

**வரலாற்று ஆய்வுகள் :** கி.பி. 3ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் மயிலையார் ஈடுபட்டார். அதன் விளைவாய் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகியோர் குறித்த நூல்களை எழுதினார்.

மூன்றாம் நந்திவர்மன் பற்றி தமிழில் எழுதப்பட்ட முதல்நூல் என்னும் பெருமையைப் பெற்றது இவரது நூல். இவைத் தவிர சங்க கால மூவேந்தர்கள், கொங்குநாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், களப்பிரர் மற்றும் இலங்கை குறித்த வரலாறு ஆகியவற்றையும் எழுதினார். களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்தைக் 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்னும் நூல் மூலம் வெளிப்படுத்தினார்.

**கலையியல் ஆய்வுகள் :** கலையியல் சார்ந்து தமிழில் வெளியான பல நூல்களுக்கும் வேங்கடசாமியே வழிகாட்டியாக விளங்கினார். தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' என்னும் நூல், கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் ஆகும்.
மேலும் இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள் ஆகியவை கலை பற்றிய இவருடைய பிற நூல்கள் ஆகும்.

**இலக்கிய ஆய்வுகள் :** மயிலையாரின் ஆய்வுப்பயணம் தொல்காப்பியம், சங்க இலக்கியம், கல்வெட்டுகள் ஆகியவற்றை நோக்கி நகர்ந்தது. அதன் விளைவாக சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பழங்காலத் தமிழர் வணிகம், களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு - சங்ககாலம் (அரசியல்) ஆகிய நூல்களையும் எழுதினார். தமிழ்நாட்டு வரலாறு என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்கு சரியான சான்றாகும்.

தமிழியலுக்குத் தேவையான பல்வேறு ஆவணங்களையும் தொகுத்து ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டதின் விளைவாக, சாசனச்செய்யுள் மஞ்சரி, மறைந்து போன தமிழ் நூல்கள், ஆகிய நூல்களை எழுதினார். இவருடைய 'பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' என்னும் நூல் ஒவ்வொரு நூற்றாண்டையும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பதற்கான முன்னோடி நூல் எனலாம். இதேபோல 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' என்னும் நூலில் 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளை நம் முன் நிறுத்துகிறார்.

**முடிவுரை :** ஆய்வுலகில் மயிலை சீனி. வேங்கடசாமியின் பங்களிப்பு மகத்தானது. தம் வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர். இவர் மேற்கண்ட பணிகளால் மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப்பேரவைச் செம்மல்' என்னும் விருதினை இவருக்கு வழங்கி கவுரவித்தது.

46.

**அ) முன்னுரை :** குழந்தைகள் பெற்றோரால் கொண்டாடப் படுகிறார்கள். பெற்றோர் என்ற சொல்லே 'பேறு பெற்றோர்' என்ற பொருள் கொண்டதுதான் எனலாம். தாய், தந்தை இல்லாத ஏதிலிக் குழந்தைகளின் நிலை மிகக் கொடியதாகும். அக்குழந்தைகளை ஏற்று வளர்க்கும் மனிதப் பண்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. இப்பண்பை வெளிப்படுத்தும் 'சாந்தா தத்' அவர்களின் 'கோடை மழை' கதை நம்மை நெகிழ வைக்கிறது.

**மருத்துவமனையில் ஆறுமுகம் :** ஆறுமுகத்தின் மருமகள் நாலுநாள் காய்ச்சலில் இறந்துவிட்டாள். அவளைப் பிரிந்து வாழ இயலாமல் மகனும் விஷத்தை விழுங்கி இறந்துவிட்டான். அவர்களுடைய குழந்தையை ஆறுமுகம்தான் பார்த்துக் கொள்கிறார். குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே தாயின் அணைப்பில் இருந்த ஒரு குழந்தையைப் பார்த்தார். அதனைப் பார்க்கவும் நினைக்கவும் மிகவும் பாந்தமாக இருந்தது. பெற்றவனையும் பிள்ளையையும் பார்க்க வேண்டிய தன் மகன் இப்படி இருவரையும் 'நட்டாத்துல விட்டுட்டுத் தன் வழியே சென்று விட்டானே' என எண்ணிக் கவலையுற்றார். தன்முறை வந்தபோது மருத்துவரிடம் குழந்தையைக் காட்டினார். நெஞ்சு சளி இருப்பதாகக் கூறி மருந்து எழுதிக் கொடுத்தார் மருத்துவர். ஊசியும் போட்டார்.


www.kalviexpress.in

www.kalviexpress.in
www.surabooks.com



**மருந்துக்கடை பாபு :** மருத்துவமனையை விட்டு வெளியே வந்த ஆறுமுகம் தேநீர் அருந்தி தொண்டையை ஆசுவாசப்படுத்திக் கொண்டார். பிறகு மருந்துக் கடைக்குச் சென்றார். பாபு ஆறுமுகத்தை வரவேற்று குழந்தையை வாங்கிக் கொண்டான். "குழந்தைக்கு உடம்பு சரியில்லையா?" என்று கேட்டான். ஆறுமுகம் "மூணு நாளா சிரமப்படுது பாவம். டாக்டர் ஊசி போட்டு மருந்து எழுதிக் கொடுத்திருக்கிறார்' என்றார். "இப்போ உன்கிட்ட மருந்து வாங்க மட்டும் வரல பாபு..." சீட்டை நீட்டியபடி அமைதியாய் சொன்னவரை யோசனையுடன் பார்த்தான் பாபு.

**ஆறுமுகத்தின் முடிவு :** பாபு, ஏற்கனவே குழந்தையற்ற தம்பதியிடம் இக்குழந்தையை கொடுப்பது பற்றி ஆறுமுகத்திடம் பேசியிருந்தான். ஆறுமுகத்திற்குக் குழந்தையைப் பிரிய மனம் இல்லையென்றாலும், தாயின்றி இருக்க வேண்டாம் என முடிவெடுத்தார். அதனால் "குழந்தைக்குத் தாய்ப்பாசம் எவ்வளவு முக்கியம்னு எனக்குப் புரிஞ்சுது பாபு. என்னோட சுயநலத்துக்காக இதை அனாதையா விட்டுட்டுப் போறது எவ்வளவு பெரிய பாதகம்? அதான். அதுவும் இல்லாம அவங்க உனக்கு நல்லாத் தெரிஞ்சவங்க. அதனால பத்திரமான இடத்துக்குத்தான் போய்ச் சேருறது புள்ளைன்னு நிம்மதி. அவங்கள உடனே வரச் சொல்லிடு. ஆக வேண்டியதைப் பார்க்கலாம்" என்று பாபுவிடம் கூறிவிட்டு விடுவிடுவென நடந்தார்.

**ஆறுமுகத்தின் நம்பிக்கை :** பாபுவுடன் வந்த தம்பதியினரைப் பார்த்தபோது, பிள்ளைப் பாக்கியம், ஏக்கம்... தவிப்பு, எதிர்பார்ப்பு அத்தனையும் அம்முகங்களில் உணர்ந்தபோது பிள்ளையின் பாதுகாப்புக் குறித்த நம்பிக்கை வலுத்தது. அவருடைய நெருடல் எல்லாம் பிள்ளையைப் பிரிந்து இருக்க வேண்டுமே எனும் உதிரத்தை உறைய வைக்கும் உறுத்தல் மட்டுமே இருந்தது.

**வந்தவரின் பரிவுரை :** 'உங்களுக்குக் கவலையே வேணாம் ஐயா!" அப்பா என அழைக்கப்பட இருப்பவன் ஓரிரு கணம் போல் தயங்கி, "ஐயா ரொம்ப ரொம்ப பெரிய மனசோட எங்க வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கொடுத்து இருக்கிறீங்க. நன்றி கூறுவதைவிட உதவி கேட்கிறேன். நீங்களும் எங்களுடன் வந்துவிடுங்கள். எங்க மூணு பேருக்குமே துணையா இருக்கும். நீங்க எதுக்கும் தயங்காதீங்க. சரின்னு சொல்லுங்க ஐயா!" என்றார்.

**முடிவுரை :** இறைஞ்சும் தன்மையில் கேட்டதும் ஆறுமுகம் அதிர்ந்து போனார். யாருக்கு யார் உதவி? மலை போன்ற அத்தனை பிரச்சனைகளும் எப்படி இப்படி ஒரே நாளில் தீர்வு கண்டு குழந்தையுடன், தன்னையும் சுவீகரித்துக் கொண்டு என எண்ணியபடி கண்ணீருடன் கைகூப்பினார் ஆறுமுகம். பெற்றோர் இல்லாத பிள்ளைகளும் பிள்ளைகள் இல்லாத பெற்றோரும் ஏதிலி நிலையில் தவிப்பவர்கள்தான். அவர்களையும் ஏற்று அரவணைக்கும் இக்கதைமாந்தர் போல் இருந்தால் மனித நேயம் மேம்படும்.

**அல்லது**

**ஆ)** **முன்னுரை :** பாரதியார் கவிஞராக, எழுத்தாளராக, பத்திரிகையாசிரியராக விடுதலை வீரராக, சீர்திருத்தவாதியாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர். புரட்சிக் கவிஞராக வலம் வந்த பாரதியார் கடித இலக்கியத்திற்கும் வித்திட்டவர். தமது தம்பியாகக் கருதிய பரலி.சு.நெல்லையப்பருக்கு அவர் எழுதிய கடிதத்தில் மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவைக் குறித்து காண்போம்.

**மொழிப்பற்று :** பிறமொழிகளை அறிந்து கொண்டு, அம்மொழிகளில் வெளிவரும் பத்திரிகைகளில் உள்ள புதுமைகளைத் தமிழ்மொழியில் புகுத்த வேண்டும். புதிய செய்தி, புதிய யோசனை, புதிய உண்மை, புதிய இன்பம் ஆகியவற்றை தமிழ் மொழியில் கொண்டு வருவதன் மூலம் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் நோய்கள் தீர வேண்டும். வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அந்தப் பள்ளிக்கூடங்களில் நவீன கலைகளை மாணவர்களுக்கு பயிற்றுவித்து அவர்கள் வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டும். சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூகோளம், விண்வெளி, இயற்கை பற்றிய ஆயிரக்கணக்கான நூல்கள் தமிழ்நாட்டில் பெருகிட வேண்டும்.

**சமூகப்பற்று :** ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள். அவற்றில் ஒன்றிற்கொன்று தாழ்வில்லை. பெண்ணை இழிவு செய்பவன் தன் கண்ணைத் தானே குத்திக் கொள்வதற்குச் சமமாகும். கல்வியறிவை பெறவிடாமல் பெண்ணை வீட்டிலே அடைத்து வைப்பவன் தன் கண்ணை மூடிக் கொள்வதற்குச் சமமாகும். இந்தச் சமூகத்தில் தொழில்கள், வணிகம், இயந்திரங்கள் யாவும் பெருக வேண்டும்.

**முடிவுரை:**

**தமிழன் என்று சொல்**
**மனதில் உறுதி வேண்டும்.**

என்று பாடிய பாரதியார், இலக்கியத் தரத்துடனும் பொதுநலப்பற்றுடனும் மொழிப்பற்றுடனும் எழுதியுள்ளமை குறித்து கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

47.

**அ)** ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

**பாவகை : பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**
**–இராமலிங்க அடிகள்**

**ஆ)** தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். **– திருவள்ளுவர்**

☆☆☆